# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குற்றச் செயல்களைத் தடுத்தல்
## (திருத்தம்)

**(22 ஆம் அத்தியாயமான) குற்றச் செயல்களைத் தடுத்தல்**
**கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*நீதி அமைச்சரும், புத்தசாசன அமைச்சருமானவரால் 2017, ஓகத்து மாதம்*
*08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ ***196 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 005360-475 (2017/08)

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (22 ஆம் அத்தியாயமான) குற்றச் செயல்களைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, நீக்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் இயைபான பிரிவின் இலக்கத்தை 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் தோதான பிரிவின் இலக்கத்தினால் மாற்றீடு செய்வதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, நீக்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் இயைபான பிரிவின் இலக்கத்தை 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் சட்டத்தின் தோதான பிரிவின் இலக்கத்தினால் மாற்றீடு செய்வதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் விதித்துரைக்கப்பட்டவாறு, எவ்வாளின் மறியற்றண்டனைக்காலம் முடிவுற்றதோ அல்லது எவ்வாள் இடைநிறுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்பின்கீழ் உள்ளாரோ அவ்வாளை மேற்பார்வை செய்வதற்குப் பொலிசாரைப் பணிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நீதிமன்றத்தை இயலச்செய்வதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளை அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், "குற்றச்செயல்" மற்றும் "பதிவாளர்" என்னும் சொல்லமைப்புக்களைப் புதிய வரை விலக்கணங்களினால் மாற்றீடு செய்வதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்து வதாகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம், குறித்தசில சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் சட்டத்தின் நோக்கெல்லை யின்கீழ் கொண்டு வருவதற்கென முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை மாற்றீடு செய்கின்றது.

**குற்றச்செயல்களைத் தடுத்தல்**
***(திருத்தம்)***

*ச.வ—ஒ. 7/2015.*

***(22 ஆம் அத்தியாயமான) குற்றச்செயல்களைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றச்செயல்களைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*22 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்), (22 ஆம் அத்தியாயமான) குற்றச் செயல்களைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், "குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 302 ஆம் பிரிவினால்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவினால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***3.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 325 (1) ஆம் பிரிவின்கீழ் அவருக்கெதிராக நடவடிக்கையெடுப் பதற்கு உத்தேசிக்குமிடத்து, நீதிவான், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 190 ஆம் பிரிவில் எது எவ்வாறி ருப்பினும்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவின்கீழ் அவருக்கெதிராக நடவடிக்கையெடுப்பதற்கு உத்தேசிக்குமிடத்து, நீதிவான், அச்சட்டத்தின் 185 ஆம் பிரிவில் எது எவ்வாறிருப் பினும்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.*

2-PL 005360 -475 (2017/03)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "பொலிசாரின் மேற்பார்வைக்கு அமைந்தவராகவிருத்தல் வேண்டுமென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "17 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறு, பொலிசாரின் அத்தகைய மேற்பார்வைக்கு அமைந்தவராகவிருத்தல் வேண்டுமென" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அ) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவருக்குக் குற்றச்செயலொன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இடைநிறுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்று விதிக்கப்படுமிடத்து, இடைநிறுத்தப்பட்ட தண்டனைத்தீர்ப்பை விதித்த தேதியிலிருந்து அத்தகைய தண்டனைத்தீர்ப்பின் நடைமுறைக் காலப்பகுதி முடிவுறும் வரை, 17 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய ஆள் பொலிசாரினால் அத்தகைய மேற்பார்வைக்கு அமைந்தவராகவிருத்தல் வேண்டுமென நீதிமன்றம் பணிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2) அவ்வாறு ஆக்கப்பட்ட எல்லா விதிகளும் -

(அ) வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவை எத்தேதியன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றனவோ அத்தேதியன்று அல்லது அத்தகைய விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதிலுள்ள "குற்றச்செயல்" என்னும் சொல்லின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

""குற்றச்செயல்" என்பது, இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறு, ஒவ்வொரு சட்டத்தின் கீழும் நிரற்படுத்தப்பட்ட அத்தகைய பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதானவொரு தவறு என்று பொருளாகும்;"; அத்துடன்

(2) அதிலுள்ள "பதிவாளர்" என்னும் சொல்லின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

""பதிவாளர்" என்பது, விரலடையாளங்கள் பதிவாளர் என்று பொருளாகும் என்பதுடன், மேலதிக விரலடையாளங்கள் பதிவாளர், பிரதி விரலடையாளங்கள் பதிவாளர் மற்றும் உதவி விரலடையாளங்கள் பதிவாளர் என்போரையும் உள்ளடக்கும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:-

“**அட்டவணை** [பிரிவு 18]

***(26 ஆம் அத்தியாயமான) இலஞ்ச சட்டம்***

| | *பிரிவு* | *தவறின் தன்மை* |
|---|---|---|
| (i) | *14* | *நீதிமுறை அலுவலர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலஞ்சம் கொடுத்தல்.* |
| (ii) | *15* | *பகிரங்க சேவையாளர்களை நேர்காணலுக் காகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவா நிறைவை ஏற்றுக்கொள்ளுதல்.* |
| (iii) | *16* | *பொலிசு அலுவலர்கள், சமாதான அலுவலர் கள் மற்றும் வேறு பகிரங்க சேவையாளர் களுக்கு இலஞ்சம் கொடுத்தல்.* |
| (iv) | *17* | *ஒப்பந்தங்கள் தொடர்பாக உதவியளித் தமைக்காக அல்லது செல்வாக்குச் செலுத் தியமைக்காக இலஞ்சம் கொடுத்தல்.* |
| (v) | *18* | *கேள்விப்பத்திரங்களின் மீளப்பெறுகையைப் பெற்றுக்கொடுப்பதற்காக இலஞ்சம் கொடுத் தல்.* |
| (vi) | *19* | *அரசாங்க அலுவல்கள் தொடர்பில் இலஞ்சம் கொடுத்தல்.* |
| (vii) | *20* | *உரிமைக்கோரிக்கைகளைச் செலுத்துதல், நியமனங்கள், தொழில்கள், மானியக் கொடை கள், குத்தகைகள் மற்றும் வேறு நன்மைகள் சம்பந்தமாக இலஞ்சம் கொடுத்தல்.* |
| (viii) | *21* | *அரசாங்கத்துடன் தொடர்புகளை வைத் திருக்கின்ற ஆட்கள் பகிரங்க சேவையாளர் களுக்கு இலஞ்சம் கொடுத்தல்.* |
| (ix) | *22* | *உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறு வனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினருக்கு இலஞ்சம் கொடுத்தல் மற்றும் உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப்படுத்தப் பட்ட நிறுவனத்தின் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு இலஞ்சம் கொடுத்தல்.* |

| | | |
|---|---|---|
| (x) | *23* | *உள்ளூரதிகாரசபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினர்களின் வாக்கின்மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அச்சுறுத்தல்களை அல்லது மோசடியைப் பயன்படுத்துதல்.* |
| (xi) | *23அ* | *இலஞ்சத்தின்மூலம் கொள்ளப்பட்ட ஆதனமாகவுள்ளதென இப்பிரிவின்கீழ் கருதப்பட்ட ஆதனத்தை அல்லது இலஞ்சத்தின்மூலம் கொள்ளப்பட்ட ஆதனம் எந்த ஆதனமாக மாற்றப்பட்டுள்ளதோ அல்லது மாற்றப்பட்டிருந்ததோ அந்த ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருத்தல் அல்லது அதனைச் சொந்தமாக வைத்திருந்து இருத்தல்.* |
| (xii) | *24* | *நோக்கமானது நிறைவேற்றப்படாதுள்ளமை முதலியன எவ்வாறிருப்பினும், அவாநிறைவை ஏற்றுக்கொள்பவர் குற்றவாளியாகவிருத்தல்.* |
| (xiii) | *25* | *பக்கம் II இன் கீழான தவறைப் புரிவதற்கு எத்தனித்தலும் அதற்கு உடந்தையளித்தலும்.* |
| (xiv) | *70* | *ஊழல்.* |

***1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்***

| | ***பிரிவு*** | ***தவறின் தன்மை*** |
|---|---|---|
| (i) | *21* | *பொய்யான சார்த்துதலைச் செய்தல்.* |
| (ii) | *22* | *இரகசியம் பேணுதல் தொடர்பான ஏற்பாடுகளை மீறுதல்.* |
| (iii) | *23* | *நானாவிதமான தவறுகள்.* |

***2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச்சட்டம்***

| | ***பிரிவு*** | ***தவறின் தன்மை*** |
|---|---|---|
| (i) | *3* | *கணினியொன்றுக்கு அதிகாரமளிக்கப்படாத அணுக்கத்தைப் பெறுதல்.* |

| | | |
|---|---|---|
| (ii) | 4 | தவறொன்றைப் புரிவதற்கென அதிகாரமளிக்கப்படாத அணுக்கத்தைப் பெறுவதற்கு ஏதேனும் செயலைச் செய்தல். |
| (iii) | 5 | சட்டமுறையான அதிகாரமின்றி கணினியொன்று ஒரு பணியைப் புரிவதனைச் செய்வித்தல். |
| (iv) | 6 | தேசிய பாதுகாப்புக்கெதிராகப் புரியப்பட்ட தவறுகள் முதலியன. |
| (v) | 7 | சட்டமுறையற்ற வகையில் பெறப்பட்ட தரவைக் கையாளுதல் முதலியன. |
| (vi) | 8 | தரவைச் சட்டவிரோதமாக இடையீடு செய்தல். |
| (vii) | 9 | சட்டவிரோதமான உபாயங்களைப் பயன்படுத்துதல். |
| (viii) | 10 | ஒரு சேவைக்கான அணுக்கத்தை இயலச் செய்கின்ற தகவல்களின் அதிகாரமளிக்கப்படாத வெளிவிடுகை. |
| (ix) | 11 | தவறொன்றைப் புரிவதற்கு எத்தனித்தல். |
| (x) | 12 | தவறொன்றுக்கு உடந்தையளித்தல். |
| (xi) | 13 | தவறொன்றைப் புரிவதற்குச் சதிசெய்தல். |

***2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்***

| | பிரிவு | தவறின் தன்மை |
|---|---|---|
| (i) | 2 | சட்டத்தின் கீழான தவறுகள். |

***1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான சமவாயச் சட்டம்***

| | பிரிவு | தவறின் தன்மை |
|---|---|---|
| (i) | 2 | சித்திரவதை என்ற தவறு. |

**2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம்**

| | *பிரிவு* | *தவறின் தன்மை* |
|---|---|---|
| (i) | *3* | சட்டத்தின் கீழான தவறுகள். |

**(182 ஆம் அத்தியாயமான) சுடுபடைக்கலன்கள் கட்டளைச் சட்டம்**

| | *பிரிவு* | *தவறின் தன்மை* |
|---|---|---|
| (i) | *22* | ஒரு துவக்கை உடைமையில் வைத்திருப்பதற்கான உரிமத்தைப் பெறத்தவறுதல். |
| (ii) | *44* | எந்தத் தவறு தொடர்பில் குறித்த தண்டனையெதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்த ஏதேனும் தவறு தவிர 182 ஆம் அத்தியாயத்தின் கீழான தவறுகள். |

**(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டம்**

| | *பிரிவு* | *தவறின் தன்மை* |
|---|---|---|
| (i) | 45(1)(அ) முதல் (ங) வரை | குடிவரவு, குடியகல்வு தவறு. |
| (ii) | 45(2) | பிரிவு 45(1) (அ) முதல் (ங) வரையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகளைப் புரிவதற்கு ஆயத்தஞ் செய்தல், எத்தனித்தல் அல்லது உடந்தையளித்தல். |
| (iii) | 45அ(1)(அ) முதல் (இ) வரை | சட்டத்திற்கு முரணாக இலங்கைக்குள் ஆட்களைக் கொண்டுவருதல் என்ற தவறுகள். |
| (iv) | 45அ(2)(அ) மற்றும் (ஆ) | பிரிவு 45அ(1)(அ) முதல் (இ) வரையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகளைப் புரிவதற்கு எத்தனித்தல், உடந்தையளித்தல் அல்லது ஆயத்தஞ் செய்தல். |
| (v) | 45இ(1)(அ) | ஒழுங்குசெய்தல் என்ற தவறு. |
| (vi) | 45இ(1)(ஆ) | ஒழுங்குசெய்தல் என்ற தவறுக்கு ஆயத்தநிலையாகவுள்ள ஏதேனும் செயலைச் செய்வதற்கு எத்தனித்தல், உதவுதல் மற்றும் உடந்தையளித்தல் அல்லது அதனைப் புரிதல். |

**2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம்**

| | பிரிவு | தவறின் தன்மை |
|---|---|---|
| (i) | 177 | ஏதேனும் இடாப்பிலுள்ள பதிவுகளைப் பொய்யானவையாக்குதல். |
| (ii) | 178(1) மற்றும் (2) | பாகம் II இன்கீழ்பாதுகாக்கப்பட்ட உரிமைகளை மீறுதல். |
| (iii) | 179 | கைத்தொழில் வடிவமைப்புக்களை மீறுதல். |
| (iv) | 181 | ஆக்கவுரிமைகளை மீறுதல். |
| (v) | 184 | குறிகளை மீறுதல். |

**1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள்**

| | பிரிவு | தவறின் தன்மை |
|---|---|---|
| (i) | 2 | பகிரங்க ஆதனத்துக்கான சொத்தழிவு. |
| (ii) | 3 | பகிரங்க ஆதனத்தின் திருட்டு. |
| (iii) | 4 | பகிரங்க ஆதனத்தின் கொள்ளை. |
| (iv) | 5 | நேர்மையீனமான கையாடல், குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம், ஏமாற்றுதல், பொய்யாகப் புனைதல் மற்றும் கணக்குகளைப் பொய்யானவையாக்குதல். |
| (v) | 10 | சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனித்தல். |

**1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்**

| | பிரிவு | தவறின் தன்மை |
|---|---|---|
| (i) | 2 | தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களின் இறக்குமதி முதலியவற்றைத் தடைசெய்தல். |
| (ii) | 3 | தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆதனத்துக்கான சேதம் முதலியன. |

| | | |
|---|---|---|
| (iii) | 4 | தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களைக்கொண்டு இறப்பை அல்லது ஊறை விளைவிக்க எத்தனித்தல் மற்றும் ஊறை விளைவித்தல். |
| (iv) | 5 | சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழான தவறுகள் தவிர்ந்த தவறுகளைப் புரிவதற்கு எத்தனித்தல். |

**2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டம்**

| | *பிரிவு* | *தவறின் தன்மை* |
|---|---|---|
| (i) | 3 | கொடுப்பனவு உபாயங்களின் மோசடியாக அமைகின்ற செயல்கள். |
| (ii) | 4 | சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கான எத்தனம். |
| (iii) | 5 | சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு உடந்தையளித்தல். |
| (iv) | 6 | சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு சதி செய்தல். |

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவை**

| | *பிரிவு* | *தவறின் தன்மை* |
|---|---|---|
| (i) | 101, 102, 113அ மற்றும் 113ஆ | இந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள ஏதேனும் தவறைப் புரிவதற்கு உடந்தையளித்தலும் சதி செய்தலும். |
| (ii) | 114 முதல் 123 வரை (இரண்டு முட்பட) | அரசுக்கெதிரான தவறுகள். |
| (iii) | 141 | மரணம் விளைவிக்கும் ஏதேனும் ஆயுதந் தாங்கி சட்டவிரோதமான ஒரு கூட்டத்தில் சேருதல். |
| (iv) | 145 | மரணம் விளைவிக்கும் ஆயுதந் தாங்கி கலகம் விளைவித்தல். |
| (v) | 190 முதல் 224 வரை (இரண்டு முட்பட) | பொய் சான்றளித்தல் அல்லது புனைதல் மற்றும் பகிரங்க நீதிக்கெதிரான தவறுகள். |

| | | |
|---|---|---|
| (vi) | *226 முதல் 256 வரை (இரண்டு முட்பட)* | *குற்றிநாணயங்களும் அரசாங்க முத்திரைகளும் தொடர்பான தவறுகள்* |
| (vii) | *286அ* | *சிறுவர்கள் தொடர்பான ஆபாச வெளியீடு, கண்காட்சி முதலியன.* |
| (viii) | *288* | *பிள்ளைகள் பிச்சையெடுக்கச் செய்வித்தல் அல்லது கூட்டிவிடுதல்.* |
| (ix) | *288அ* | *உடலுறவுக்குக் கூட்டிவிடுபவர்களாகச் செயற்படுத்துவதற்குப் பிள்ளைகளை வாடகைக்கு அல்லது ஊழியத்திற்கு அமர்த்தல்.* |
| (x) | *288ஆ* | *தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பிள்ளைகளை வாடகைக்கு அல்லது வேலையில் அமர்த்தல்.* |
| (xi) | *296, 297, 300 மற்றும் 301* | *கொலை, மனிதவுயிர் போக்கல் மற்றும் அதற்கான எத்தனம்.* |
| (xii) | *303 முதல் 309 வரை (இரண்டு முட்பட)* | *கருச்சிதைவேற்படுத்தல் அல்லது பிறவாத பிள்ளைகளுக்கு ஊறுகளை விளைவித்தல், சிசுக்களைக் கைவிடுதல் மற்றும் பிள்ளைப் பேறுகளை மறைத்தல்.* |
| (xiii) | *308அ* | *பிள்ளைகளைக் கொடுமைப்படுத்தல்.* |
| (xiv) | *315 முதல் 324 வரை (இரண்டு முட்பட)* | *அபாயகரமான ஆயுதம் முதலியவற்றினால் வேண்டுமென்று காயம் விளைவித்தல் முதலியன.* |
| (xv) | *334 முதல் 339 வரை (இரண்டு முட்பட)* | *முறைகேடாக அடைத்துவைக்கப்படுதல், முதலியன.* |
| (xvi) | *344* | *பகிரங்க சேவையாளர் ஒருவர் தமது கடமையை நிறைவேற்றுவதனைத் தடுப்பதற்குக் குற்றமுறையான வலோத்காரத்தைப் பிரயோகித்தல்.* |
| (xvii) | *345* | *பாலியல் தொல்லை கொடுத்தல்.* |
| (xviii) | *354* | *ஆட்கவர்தல்.* |

| | | |
|---|---|---|
| (xix) | 355 முதல் 359 வரை (இரண்டு முட்பட) | ஆட்கவர்தல் மற்றும் ஆட்கடத்தல் என்ற தவறின் உக்கிரமான வடிவம். |
| (xx) | 358அ | தனிசுத்தளை முதலியன மற்றும் ஆயுதங் தாங்கிய போராட்டத்திற்காகப் பிள்ளைகளின் ஆட்திரட்டல். |
| (xxi) | 360 | பத்து வயதுக்குக் கீழ்பட்டவொரு சிறுவரை ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல். |
| (xxii) | 360அ | கூட்டியிடுதல். |
| (xxiii) | 360ஆ | குழந்தை விபசாரம். |
| (xxiv) | 360இ | விலைப்படுத்தல். |
| (xxv) | 360ஈ | மகவேற்புத் தொடர்பான தவறுகள். |
| (xxvi) | 360உ | பிள்ளையொன்றைப் பரிந்துகேட்டல் தொடர்பான தவறுகள். |
| (xxvii) | 364 | கற்பழிப்பு. |
| (xxviii) | 364அ | முறையில்லா புணர்ச்சி. |
| (xxix) | 365 | இயற்கைக்கு மாறான தவறு. |
| (xxx) | 365அ | ஆட்களுக்கிடையில் மிக்க இழிவான செயல்கள். |
| (xxxi) | 365ஆ | பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம். |
| (xxxii) | 367 முதல் 371 வரை (இரண்டு முட்பட) | திருட்டு, கால்நடைகளின் திருட்டு முதலியன. |
| (xxxiii) | 373 முதல் 378 வரை (இரண்டு முட்பட) | அச்சுறுத்திப் பெறுதல் முதலியன. |
| (xxxiv) | 380 முதல் 385 வரை (இரண்டு முட்பட) | கொள்ளை முதலியன. |
| (xxxv) | 387 | நேர்மையீனமான கையாடல். |
| (xxxvi) | 389 முதல் 392 வரை (இரண்டு முட்பட) | குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம். |

| | | |
|---|---|---|
| (xxxvii) | *394 முதல் 396 வரை (இரண்டு முட்பட)* | களவாடப்பட்ட ஆதனத்தை நேர்மையீனமாகப் பெறுதல், முதலியன. |
| (xxxviii) | *400 முதல் 403 வரை (இரண்டு முட்பட)* | ஏமாற்றுதல். |
| (xxxix) | *404 முதல் 407 வரை (இரண்டு முட்பட)* | ஆதனங்களின் மோசடியான உறுதிகளும் கையளிப்புகளும், முதலியன. |
| (XL) | *412 முதல் 416 வரை (இரண்டு முட்பட)* | விலங்குகள், நீர்ப்பாசன வேலைகள் மற்றும் பொது வீதிகள் முதலியவற்றுக்கான சொத் தழிவு. |
| (XLi) | *418 முதல் 426 வரை (இரண்டு முட்பட)* | சொத்தழிவு முதலியன. |
| (XLii) | *435 முதல் 451 வரை (இரண்டு முட்பட)* | வீடு அத்துமீறல், வலிந்து வீடு புகுதல் முதலியன. |
| (XLiii) | *454 முதல் 467 வரை (இரண்டு முட்பட)* | ஓர் இறுதிவிருப்பாவணம் முதலியவற்றைப் பொய்யாகப் புனைதல், மோசடியாக இல்லா தாக்குதல் முதலியன மற்றும் கணக்குகளைப் பொய்ப்பித்தல். |
| (XLiv) | *478க முதல் 478ஈ வரை (இரண்டு முட்பட)* | நாணயத்தாள்கள் மற்றும் வங்கித்தாள்கள் தொடர்பான தவறுகள். |
| (XLV) | *490* | இவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள தவறு களைப் புரிவதற்கு எத்தனித்தல். |

**(218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் சட்டம்**

| | *பிரிவு* | *தவறின் தன்மை* |
|---|---|---|
| (i) | 54அ | அபாயகரமான அவுடதங்களை உற்பத்தி செய் தல், விலைப்படுத்தல், இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் மற்றும் உடைமை யில் வைத்திருத்தல். |

| | | |
|---|---|---|
| (ii) | 54ஆ | பிரிவு 54அ என்பதன் கீழான தவறொன்று புரியப்படுவதில் உடந்தையளித்தல். |
| (iii) | 78 | 218 ஆம் அத்தியாயத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ்சட்டமுறையாக ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது பணிப்பை மீறுதல் அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுதல். |

**2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்**

| | பிரிவு | தவறின் தன்மை |
|---|---|---|
| (i) | 3(1) | பணம் தூய்தாக்கல் என்ற தவறுகள். |
| (ii) | 3(2) | பணம் தூய்தாக்கலுக்கு எத்தனித்தல், சதிசெய்தல் மற்றும் உதவியளித்தல் அல்லது உடந்தையளித்தல். |

**1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்**

| | பிரிவு | தவறின் தன்மை |
|---|---|---|
| (i) | 2 | சட்டத்தின்கீழான தவறுகள். |
| (ii) | 3 | சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தஞ் செய்தல், உடந்தையளித்தல், சதி செய்தல் அல்லது தூண்டுதல். |

**1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம்**

| | பிரிவு | தவறின் தன்மை |
|---|---|---|
| (i) | 64 | கட்டணத்தைச் சட்டவிரோதமாக விதித்தல்.”. |

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**8.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்